# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

## ***<u>சென்னை தங்கசாலை தெருவிலுள்ள வணிகம் கட்டிடம் ஏல அறிவிப்பு</u>***

ந.க. எண் 300 / 1431 / சி3 / நாள் 25.08.2022

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமானதும், சென்னை தங்க சாலை தெருவில் உள்ளதுமான வார்டு 1, பிளாக் 5 TS .No 6069 New No 489ல் கதவு எண் 506ல் உள்ள வணிக கட்டிடம் 5 ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமமாக மாத வாடகை அடிப்படையில் (2316 சதுர அடி) டெண்டர் / பொது ஏலம் விடுதல் **16.09.2022**ஆம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் தங்கசாலை தெருவிலுள்ள சென்னை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் கீழ்க்கண்ட விபரப்படி பொது ஏலம் / டெண்டர் நடைபெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| டெண்டர் கொடுக்க கடைசி நாள் / நேரம் | 16.09.2022 | மதியம் 2.00 மணி |
| பொது ஏலம் / டெண்டர் திறப்பு நடைபெறும் நாள் / நேரம் | 16.09.2022 | மதியம் 2.30 மணி |
| பொது ஏலம் / டெண்டர் திறப்பு நடைபெறும் இடம் | **315, தங்கசாலை தெரு, பூங்கா நகர், அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், சென்னை 600 003.** | |
| டெபாசிட் தொகை வரைவோலை | **₹.30,00,000** | |

டெண்டர் / பொது ஏலம் நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலக வேலை நேரங்களில் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம். மேலும் விபரங்களை www.srirangam.org, https://hrce.tn.gov.in மற்றும் http://www.tenders.tn.gov.in/publish/ என்ற வலைதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். டெண்டர் படிவத்தின் விலை ₹.2,000/- இத்திருக்கோயில் அலுவலகத்திலும் மற்றும் ஏலம் நடைபெறும் இடமான மேற்படி ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலிலும் ₹.2,000/- செலுத்தி **15.09.2022** மாலை **5.45** மணி வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் வலைதளத்தில் டெண்டர் படிவம் பதிவிறக்கம் செய்து அதற்குரிய விலையாக ₹.2,000/-த்திற்கு இத்திருக்கோயில் பெயரில் எடுக்கப்பட்ட வரைவோலையினை டெண்டர் படிவத்துடன் இணைத்து டெண்டர் பெட்டியில் சேர்க்கவும்.

**சீ. செல்வராஜ்,**
தக்கார் / இணை ஆணையர்

**செ. மாரிமுத்து,**
இணை ஆணையர்/செயல் அலுவலர்

# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

ந.க. எண் 300 / 1431 / சி3 / நாள் 25.08.2022

## ***சென்னை தங்கசாலை தெருவிலுள்ள வணிகம் கட்டிடம்***
## ***ஏல விளம்பரம் அறிவிப்பு***

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை தங்க சாலை தெருவில் உள்ளதுமான வார்டு 1, பிளாக் 5 TS .No 6069 New No 489ல் கதவு எண் 506ல் உள்ள வணிக கட்டிடத்தினை (2316 சதுர அடி) ஆணையர் அங்கீகாரம் உத்தரவு தேதி முதல் மாத வாடகை அடிப்படையில் ஐந்து ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்தினை பொது ஏலம்/டெண்டர் மூலம் **16.09.2022** அன்று பிற்பகல் 2.30 மணிக்கு சென்னை தங்கசாலை தெரு, கதவு எண் 315, அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில், சென்னை இந்துசமய அறநிலையத்துறை உதவி ஆணையர் முன்னிலையில் விடப்படவுள்ளது. அன்றைய ஏலத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கலந்துகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## நிபந்தனைகள்

1. பொது ஏலம்/டெண்டர் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ₹.30,00,000/- வரைவோலை டெபாசிட் செலுத்தி கலந்து கொள்ளலாம்.

2. ஏலம் / டெண்டர் டெபாசிட் தொகை ***இணை ஆணையர்/செயல் அலுவலர் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம். திருச்சிராப்பள்ளி*** பெயருக்கு வரையப்பட்ட (Drawn in favour of) வங்கி வரைவோலை மூலம் செலுத்த வேண்டும். வரைவோலை **25.08.2022**ஆம் தேதிக்கு பின்னர் எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

3. ஏலத்தில் / டெண்டரில் கலந்துகொள்பவர்கள் உரிய டெபாசிட் தொகையை செலுத்தி ஏலம் கோர வேண்டும்.

4. 16.09.2022 பிற்பகல் 2.30 மணிக்கு விதிகளின்படி பொது ஏலம் விடப்படும். ஏலம் ஒரு மாதத்திற்கான வாடகை தொகை எவ்வளவு என்பதனை கேட்க வேண்டும்.

5. ஊர்ஜிதமான ஏலத் தொகையில் 5% வாடகை உயர்வு செய்து அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு செலுத்த வேண்டும்.

6. ஏலம் / டெண்டர் தொகையில் உயர்ந்த தொகை ஏற்றுக் கொள்ளப்படும்.

7. ஏலம் / டெண்டர் ஆணையரின் ரத்து அதிகாரத்துக்குட்பட்டது.

8. ஏலத்தில் இறுதியாக கோரும் தொகை உயர்ந்த கேள்வியாகக் கருதி ஏலம் நிறுத்தி வைக்கப்பட்டு டெண்டர் திறக்கப்படும். அதன்பின்னர் ஏலம் / டெண்டரில் எந்த தொகை உயர்வாக உள்ளதோ, அந்த அடிப்படையில் ஏலம் / டெண்டர் முடிவு செய்யப்படும்.

9. திருக்கோவிலுக்கு குத்தகை பாக்கி செலுத்தாதவர்கள், திருக்கோவிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் மேற்படி ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதி இல்லை.

10. ஏலத்தினை ரத்து செய்யவோ, வேறு தேதிக்கு/நேரத்திற்கு மாற்றவோ இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு.

11. ஏலம் உறுதியானவர்கள் அந்த தொகையின் அடிப்படையில் ஓராண்டு வாடகைத் தொகை கணக்கிட்டு அதை அட்வான்ஸ் தொகையாக ஏலம் நடைபெறும் அன்றே உடன் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. ஏலம் / டெண்டர் தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் அளிக்கும் தெளிவுரையே இறுதியானது.

13. டெபாசிட் தொகை வங்கி வரைவோலையாக இணை ஆணையர்/செயல் அலுவலர் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் என்ற பெயரில் மாற்றும் வகையில் இருக்க வேண்டும்.

14. டெபாசிட் செலுத்தாத டெண்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏலத்திற்கு டெபாசிட் செலுத்தாதவர்கள் ஏலம் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள். ஏலம் / டெண்டரில் உறுதி செய்யப்படாத டெபாசிட் தொகை உடனடியாக திரும்பி வழங்கப்படும்.

15. டெண்டர்க்கு டிபாசிட் செலுத்திவிட்டு அதன் நகல் காண்பித்து ஏலத்தில் கேள்வி கேட்கலாம்.

16. வணிகம் நடத்துவதற்கான மின்இணைப்பு, குடிநீர் இணைப்பு மற்றும் தேவையானவற்றை ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் பெயரில் ஏலதாரர் செலவில் பெற வேண்டும். அரசுக்கு வணிகம் தொடர்பாக செலுத்த வேண்டிய அனைத்துவித கட்டணங்களையும் ஏலதாரரே செலுத்த வேண்டும்.

17. மேற்படி வணிக இடத்திற்கான மின் கட்டணத்தினை தங்கள் சொந்த செலவில் செலுத்த வேண்டும்.

18. ஏலம் உறுதியானவருக்கு ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலால் அனுமதி வழங்கப்படும். இந்த ஏலம் / டெண்டர் Licence பெறும் உரிமத்தின் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. 5 ஆண்டு கால முடிந்தவுடன் அந்த உரிமம் காலாவதி ஆகிவிடும்.

19. வணிக இடத்தினை இத்திருக்கோயிலின் முன் அனுமதியின்றி வேறு நபருக்கு உள் வாடகைக்கு விடவோ வேறு வகையில் மாற்றித்தரவோ கூடாது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் மேற்படி கட்டிடத்தை நேரில் பார்த்ததாகவே கருதப்படுவர்.

20. ஏலம் உறுதி செய்தபின்னர் கட்டிடம் குறைபாடாக உள்ளது. அதனை திருக்கோயில் நிர்வாகம் சரிசெய்துதர வேண்டும் என்று கேட்க உரிமையில்லை. கட்டிடம் உள்ளது உள்ள நிலையிலேயே ஏலம் விடப்படும்.

21. மராமத்து பணிகள் / கூடுதல் வசதி தேவைப்பட்டால் அரசு பதிவு பெற்ற பொறியாளர் மூலம் மதிப்பீடு தயாரித்து திருக்கோயில் அனுமதிபெற்றும், மாநகராட்சி அனுமதி பெற்றும் மராமத்து வேலைகளை தங்கள் சொந்தசெலவில் செய்து கொள்ள வேண்டும்.

22. ஏலம் உறுதியானவர் ₹.1000/–க்கான அரசு முத்திரைத்தாளில் திருக்கோயில் வாசகப்படி முச்சலிக்கா எழுதிக் கொடுக்க வேண்டும்.

23. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

திருக்கோவில் நிர்வாகம்.